1973 மார்ச் 27]

(3) மேற்கண்ட காரணங்களின் விளைவாகத் திரும்பத் திரும்ப ஒப்பந்தப் புள்ளிகள் கேட்க வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டது.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, இந்த வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்டம் நீண்ட நெடுநாட்களாகவே இருந்துகொண்டு இருக்கிறது. அதை இந்த ஆண்டாவது முடிப்பதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது ஒரு பெரிய திட்டம். இதற்கு 4 கோடியே 39 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கிறது. வேலைகள் சீக்கிரமாக நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. இந்த ஆண்டு பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த பத்து லட்சம் ரூபாய் செலவழிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பக்கிங்ஹாம் கால்வாயைச் சீர்படுத்தல்

* 530 வினா.—**திரு. கா. வேழவேந்தன் :**
திரு. சி. ஆறுமுகம் :
திரு. சு. துரைசாமி :
திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து பழவேற்காடு வரை எண்ணூர் வழியாக பக்கிங்ஹாம் கால்வாயைச் சீர்படுத்தி உல்லாசப் படகுகள் விடும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தமிழ்நாட்டில் பக்கிங்காம் கால்வாயைச் சீர்படுத்தும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படவிருக்கிறது. உல்லாசப் படகுகள் விடும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே, பழவேற்காட்டிலிருந்து மகாபலிபுரம் வரையிலே இப்படி சீர்படுத்தி உல்லாசப் படகுகள் விடுகின்ற திட்டம் செயல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பக்கிங்ஹாம் கால்வாய் சீரமைப்புத் திட்டத்திற்காக இந்த ஆண்டு 50 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். 4 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டம் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. பக்கிங்ஹாம் கால்வாய் சீரமைப்புத் திட்டம் முடிந்ததற்குப் பிறகு அதிலே விசைப் படகுகள், துடுப்புப் படகுகள், உல்லாசப் படகுகள் விடுவதுபற்றி முடிவு செய்யலாம்.

திரு. சி. ஆறுமுகம் : பக்கிங்ஹாம் கால்வாய் வழியாக பழைய காலத்தில் பொருட்கள் வந்திருக்கின்றன. அதன் காரணமாக பொருட்களின் விலை குறைந்திருக்கின்றது. ஆனால் இப்பொழுது லாரிகளில் வருவதால் பொருட்களின் விலை ஏறியிருக்கிறது. இவற்றையெல்லாம் மனதிலே கொண்டு அரசு வேகமாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்திலே இந்தத் திட்டத்தைப்பற்றி அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போல் திட்டங்கள் விரைவாகச் செயல் படுத்தப்படும்.

எல்லாபுரம், கும்முடிப்பூண்டி நிலவள வங்கிகள்

*531 வினா.—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) எல்லாபுரம், கும்முடிப்பூண்டி நிலவள வங்கிகள் மூலம் 1971-72-ல் வழங்கப்பட்ட கடன்கள் பற்றிய விவரங்கள் யாவை?

(இ) 1972-73-ல் கடன் வசதிகளை மேலும் விரிவுபடுத்த மேற் கொண்டுள்ள தீவிரப் பணிகள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) இதைப் பற்றிய விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

@ 124-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.